# நாவலர் விழா

விருதுபெறும்

## சான்றோர் ஏடு



1986

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையின் பணி வருடா வருடம் குருபூசை நடத்துதல், கருத்தரங்குகள் நடத்துதல் போன்றவற்றுடன் சுருங்கி விடலாகாது. நாவலருடைய சமயப் பணிகளைப் போலவே அவருடைய சமூகப் பணிகளும் அமைந்தன. நாவலர் பெருமானுடைய சமயப் பணிகளும் அடியொற்றிச் சேவைகள் செய்து வந்த சபை, அப்பெருமானுடைய சமூகப் பணிகளை அடியொற்றியும் சேவைகளாற்ற முயன்று வருகின்றது. எம்முடைய சமூகத்திலுள்ள சமய, கலை இலக்கியச் சான்றோர்களைக் கௌரவிப்பதின் மூலம் இளந் தலைமுறையினர்க்கு அச்சான்றோர்களின் திறன்கள் எடுத்துக் காட்டுகளாக அமையலாம். 1849ல் திருவாவடுதுறை ஆதீன முதல்வர்; கந்தப்பிள்ளை ஆறுமுகத்தின் திறன்களை அறிந்து வழங்கிய பட்டந்தான் இன்றும் நம்மிடையே 'நாவலர்' என்று வழங்குகின்றது. தமிழ் நாட்டு ஆதீனங்களும் ஈழத்தில் நல்லை ஆதீனமும் கலை, இலக்கிய, சமய அறிஞர்களைக் கௌரவித்துப் பட்டங்கள் வழங்கிவந்துள்ளன. சான்றோர் ஒருவருக்கு அளிக்கப்படும் பட்டம் சில வேளை பெரிதாகத் தோன்றாதிருக்கலாம். ஆனால் அப்பட்டத்தினை வழங்க எண்ணியபொழுதும் வழங்கும் பொழுதும் அச் சான்றோனின் திறமைகள் மீண்டும் நினைவுகூரப்படுகின்றன என்பதை நாம் உணரவேண்டும். இந்த வகையிலேதான் நாவலர் சபை இவ்வாண்டு நாவலர் குருபூசையினையொட்டி 27 சான்றோர்களைக் கௌரவித்து விருதுகள் வழங்க எண்ணியது. அச்சான்றோர்கள் பற்றிய தகவல்கள் கொண்ட இவ்வேட்டினையும் அந்நிகழ்ச்சியோடொட்டி நாவலர்சபை வெளியிடுகின்றது.

ஆட்சிக்குழு
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை

23-11-1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரம்மஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள்

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் பிரதம குரு பிரம்மஸ்ரீ சு. பரமேஸ்வரக் குருக்கள். 1928 ஆம் ஆண்டு நயினாதீவிலே பிறந்தவர். தந்தையாரிடம் தமிழ் சமஸ்கிருத மொழிகளைக் கற்ற இவர், நயினை நாகபூஷணி வித்தியாசாலையில் வரன்முறைக் கல்வியினையும் பெற்றார். சிதம்பரத்தில் காஞ்சிப் பெரியார் ஆசியுடன் வேதங்களையும், சமஸ்கிருத மொழியினையும் இவர் கற்றார். திருகோணமலை பூரணாநந்தேஸ்வரக் குருக்கள், நயினை ஐ. கைலாசநாதக் குருக்கள், இணுவில் இராமநாதக் குருக்கள் ஆகியோரிடம் இவர் கிரியைநெறி பற்றிய பாடங் கேட்டார். இவருடைய 27 ஆவது வயதில் ஐ. கைலாசநாதக் குருக்களைக் குருவாகக் கொண்டு ஆச்சாரியாபிஷேகம் நடைபெற்றது. திருகோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோயிலிலேயே முதன் முதலாகக் கொடியேற்று வைபவத்தை நடத்தினார். ஏழு வருடங்களாக நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் கொடியேற்று வைபவத்தை நடாத்தி வருகின்றார். திருக்கோணேஸ்வரம், கொழும்பிலுள்ள கோயில்கள் யாவும் உட்பட இருநூறுக்கு மேற்பட்ட கோயில்களின் கும்பாபிஷேகக் கிரியைகளை நடாத்தி வைத்துள்ளார். தமிழ்நாட்டிலுள்ள திருப்பழனி முருகன் ஆலயக் கும்பாபிஷேகத்தினை ஈசான சிவாசாரியாருடன் குருவாகவிருந்து நடத்தி வைத்துள்ளார். இவ்வாண்டு இலண்டன் முருகன் கோயில் கும்பாபிஷேகத்தினை நடாத்தி வைத்து நாடு திரும்பியுள்ளார். தமிழ்நாட்டு மெய்கண்டார் ஆதீனம் "சிவாகம ஜோதி" என்றும், நல்லை ஆதீனம் "சிவாகம ஞானபானு" என்றும், புங்குடுதீவு கண்ணகை அம்பாள் தேவஸ்தானம் "பிரதிஷ்டா பூஷணம்" என்றும், இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆலயத் தேவஸ்தானம் "வேத சிவாகம கிரியா சாகரம்" என்றும் இவருக்குப் பட்டங்கள் வழங்கியுள்ளன. வைதீக, ஆகம, சிவநெறிகளிலே துறைபோய அறிவினையுடைய இவர் ஆற்றிய பணிகளைப் பாராட்டி நாவலர் சபை "சிவாகமக்கிரியா மாமணி" என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஸ்ரீ. க. சிவலோகநாதக் குருக்கள்

திருநெல்வேலி முத்துமாரி அம்பாள் ஆலயப் பிரதம குரு சைவக்குருக்கள் சிவஸ்ரீ கந்தையா சிவலோகநாதக் குருக்கள் ஆவார். இவர் இக்கோயிலின் பரம்பரைக் குருக்கள். 1920 ஆம் ஆண்டு திருநெல்வேலியிலே பிறந்த இவர், கோப்பாய் சுப்பிரமணிய சாஸ்திரிகளிடம் சமஸ்கிருத மொழியினையும், கிரியா முறைகளையும் கற்றுத் தேர்ந்தார். கோயிற் கிரியைகள் பற்றி மாத்திரமன்றி கோயில் அமைப்புப் பற்றிய ஞானமும் இவருக்குண்டு: இரகுநாதையரின் பஞ்சாங்கக் கணிப்புத் தொடர்பாகத் தொடர்ந்து பதினைந்து வருடங்களாக உதவி புரிந்து வருகிறார். குரும்பசிட்டி சன்மார்க்க சபை இவருக்கு "சிவாகம கிரியாபூஷணம்" என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தது. இவர் ஈழத்திலே சைவக்குருக்கள் பாரம்பரியத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணியினையும், திறன்களையும் பாராட்டி நாவலர் சபை "சைவக்கிரியா மாமணி" என்னும் பட்டத்தினை இவருக்கு வழங்கிக் கௌரவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. நாகமணி முத்தையா

'ஆத்மஜோதி' என்று சொன்னாலே போதும், திரு. முத்தையாவைப் பற்றிப் பேசப்படுகின்றது என்று எவருமே உடனடியாக அறிந்து கொள்வர். 1918ல் ஏழாலையிலே பிறந்த திரு. முத்தையா தனது இளமைக் காலத்திலேயே பொதுத் தொண்டுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். இவருடைய நாற்பது வருட காலப் பொதுவாழ்வு அருள்நெறிவாய்ப்பட்டதாகவே அமைந்தது. ஆசிரியராக; சமுதாயச் சீர்திருத்தவாதியாக, சமயப் பிரசாரகராக, பத்திரிகை ஆசிரியராக, எழுத்தாளராகப் பணிபுரிந்து வந்துள்ள ஆத்மஜோதி முத்தையா அவர்களை இந்நாட்டு மக்கள் மாத்திரமன்றிப் பிறநாடுகள் சிலவற்றிலுள்ளவர்களும் நன்கு அறிவர். எளிமையான வாழ்வும். உயர்ந்த சிந்தனையும் கொண்ட ஒருவராக, மக்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்கி வருகிறார். அழகான, தெளிவான நடையிலே சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்த வல்லவர். இவர் சொற்பொழிவாற்றாத இடமே ஈழத்தில் இல்லை எனக் கூறலாம். அருள்நெறிப்பட்ட பல விடயங்களை விளக்கும் நூல்கள் பலவற்றை வெளியிட்டுள்ளார். அவற்றுட் சில: 'திருமுறைக் காட்சிகள்', 'திருமுறைச் செல்வம்', 'முப்பெரும் சித்தர்கள்'. 'பன்னிருமாத நினைவுகள்' 'தத்துவக் கதைகள்', 'இந்தோனேசியாவில் இரண்டு வருட அனுபவம்! இத்தகைய நூல்களை எழுதி, எமது தமிழ் மக்களை அருள்நெறிப்படுத்தும் பணியிலே திரு. முத்தையா அயராது உழைத்து வந்துள்ளார். சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளுக்குச் சென்று சைவத்தையும், தமிழையும் பரப்பியுள்ளார். இவருடைய சமயப் பணியினையும், சொற்பெருக்காற்றும் திறனையும், எழுத்தாற்றலையும், சமூகப் பணியினையும் பாராட்டி நாவலர் சபை "அருள்நெறி மாமணி" என்னும் பட்டத்தினை வழங்கி இப்பெரியாரைக் கௌரவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி வசந்தா வைத்தியநாதன்

ஈழத்தில் பெண் பேச்சாளர்கள் மிகச் சிலரே. அவர்களுள் அருள்நெறிச் சொற்பொழிவுகள் ஆற்றுபவர்கள் ஒரு சிலரே. திருமதி வசந்தா வைத்தியநாதன் அச் சிலருள் ஒருவராவர். சென்னைப் பல்கலைக்கழகத்திலே 1959 ஆம் ஆண்டு 'வித்துவான்' பட்டம்பெற்ற இவர் தர்மபுர ஆதீனத்தின் சமயப் பிரசாரகராகப் பணிபுரிந்துள்ளார். அப்பணியினைப் பாராட்டித் தர்மபுர ஆதீனம் அவருக்குத் "தொண்டர் திலகம்" என்னும் பட்டத்தினை வழங்கியது. ஈழத்திலே நல்லை ஆதீனத்துடன் தொடர்பான சமயப்பணிகள் பலவற்றை இவர் செய்து வருகிறார். இனிமையான குரலிலே கேட்டாரைப் பிணிக்கும் பேச்சுத் திறனுடைய அம்மையார் தன் சொற்பொழிவுகள் மூலமாக அருள்நெறிப்பட்ட பணிகளைச் செய்து வருகிறார். நல்லை ஆதினம் இவர் திறமைகளைப் பாராட்டி "அருள் மொழியரசி" என்னும் பட்டத்தினை வழங்கியது. தச்சன் தோப்பு விநாயகர் ஆலய பரிபாலன சபை "செஞ்சொற் செல்வி" என்னும் பட்டத்தினையும், ஆவரங்கால் சிவன் கோயில் "விழைதமிழ் வித்தகி" என்னும் பட்டத்தினையும் வழங்கிக் கௌரவித்தன. புளியங்கூடல் மகாமாரியம்மன் ஆலயக் கும்பாபிஷேகப் பூர்த்தி விழாவிலே "ஸ்ரீ வித்யாபூஷண்" என்னும் பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது. இவருடைய பேச்சுத் திறனையும், அத்திறனாலே ஆற்றும் சமயப் பணியினையும் பாராட்டி நாவலர் சபை "அருள்நெறி மாமணி" என்னும் பட்டத்தினை வழங்கி இவரைக் கௌரவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. சின்னத்தம்பி தம்பியையா

யாழ்ப்பாணத்துப் பண்பாட்டு வரலாற்றிலே புராண படனம் ஒரு சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. அச்சு யந்திரம், பத்திரிகை, வானொலி போன்ற நவீன பொது மக்கட் சாதனங்கள் வருவதற்கு முன் புராண படனமே பொதுமக்கட் கல்விச்சாதனமாக விளங்கியது. புராண படனத்துடன் தொடர்புற்ற அறிஞர்கள் பலர். இவ்வரிசையிலே ஏறக்குறைய முப்பது வருடப் புராண படன அனுபவமுடையவராகத் திகழ்கிறார் சி. தம்பியையா உபாத்தியாயர். திருநெல்வேலி கிழக்கில் பரம்பரையாகப் புராணப் படிப்பில் பயன் சொல்லி வந்த குடும்பத்திலே 1913 ஆம் ஆண்டு இவர் பிறந்தார். தமிழ் அறிவு இவருக்கு மூதாதையரின் முதுசொத்தாகக் கிடைத்தது. திண்ணைப் பள்ளிக்கூடத்திலும் தமிழ் அறிவை வளர்த்துக் கொண்டார். பேரனாருடைய ஊக்கத்தினாலே பயன் சொல்லும் பணியிலே இறங்கினார். நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடம் சந்தேக நிவர்த்திகளைச் செய்துகொண்டார். செய்யுட்கள் இயற்றும் புலமையும் இவருக்குண்டு. கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடல் புராணம். திருச்செந்தூர்ப் புராணம் ஆகியவற்றுக்குப் பயன் சொல்லும் புலமை வாய்ந்தவர். ஐம்பது தடவைகளுக்கு மேல் கந்தபுராணத்துக்குப் பயன் சொல்லி வந்துள்ளார். நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்று வரும் புராணப் படிப்பில் பயன்சொல்லி வரும் திரு. தம்பியையாவின் புராணபடனப் புலமையினைப் போற்றியும், இவர், இத் துறை வளர்ச்சிக்கு ஆற்றிவந்துள்ள சேவையினைப் பாராட்டியும் நாவலர் சபை இவருக்கு ''பௌராணிக மாமணி;'' என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. வே. சிவஞானம்

பண்ணிசையினைப் பாவத்துடனே பாடுவதில் திறனுடையவராக விளங்குபவர் பண்ணிசைப் புலவர் வே. சிவஞானம். 1926 ல் கோலாலம்பூரிலே பிறந்த இவர் தந்தையாரிடம் இசைப்பயிற்சியைச் சிறு வயதிலேயே பெற்றுக்கொண்டார். யாழ்ப்பாணம் வந்தபின்னரும் இசைப் பயிற்சியினை மேற்கொண்டார். இசைத்துறையிலே உயர்கல்வி பெறும் வாய்ப்புக் கிடையாமல், நில அளவைப் பகுதியில் உத்தியோகத்தராகக் கடமையாற்றிய போதும் இசைப்பயிற்சியினைக் கைவிட்டாரில்லை. இயற்கையாகவே இவருக்கு வாய்த்த இசை ஞானம் இவருக்கு இலங்கை வானொலியிலே தோத்திரப் பாடல்கள் பாடும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது. வயலின் வாசிப்பதிலும் பயிற்சி பெற்று அரங்கிசைக்கு அணிசெய் கலைஞராகும் திறமையையும் பெற்றார். இவருக்குப் பண்ணிசையிலேயே மிகுந்த நாட்டம் சென்றது. இறைவன் புகழ் பாடுதலுக்கு இதுவே பொருத்தமான வழியென்பதையும் கண்டு கொண்டார். இசையிலே தேர்ச்சி பெற்றிருந்தபடியால் பண்ணிசை பயில்வது இலகுவாய் அமைந்தது. காலத்துக்குக் காலம் ஈழத்துக்கு வந்துபோன ஓதுவார் மூர்த்திகளின் கச்சேரிகளும், அவர்களுடன் நேரில் கொண்ட தொடர்புகளும், திருச்சி, சென்னை வானொலிகளில் ஒலிபரப்பான பண்ணிசை நிகழ்ச்சிகளும், ஈழத்திற் பண்ணிசை பாடி வந்த பெரியார்களின் தொடர்புகளும் குறிப்பாகக் கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரம முதல்வர் அருள்மிகு வடிவேல் சுவாமிகளின் தொடர்பும், இவர் பண்ணிசை பாடவும், பாவனைத் திறனுடன் பாடவும் பெரிதும் உதவின. பண்ணிசை வகுப்புகள் நடத்தியும்; பஜனைகள் செய்தும் இறைபுகழ் பாடுவதே தொண்டாகக் கொண்ட இவருக்கு கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமம் "அருளிசைச் செல்வர்" என்றும், தொண்டை மண்டல ஆதீனம் "பண்ணிசைப் புலவர்" என்றும், திருமலைச்சச்சிதானந்த யோக தபோவனம் "பக்திரத்தினம்" என்றும், நல்லை ஆதீனம் "பண்ணிசை மாமணி" என்றும் ஊரெழு சைவ முன்னேற்றச் சங்கம் "தேனருவி" என்றும் பட்டங்கள் வழங்கிக் கௌரவித்தன. இவருடைய பண்ணிசைப் பணியினைப் போற்றியும், பண்ணிசைத் திறனைப் பாராட்டியும் நாவலர் சபை இவருக்கு "அருளிசை மாமணி" என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர் நா. சிவபாதசுந்தரனார்

தமிழ்மொழி இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றைத் துறைபோகக் கற்றவர் புலவர் சிவபாதசுந்தரனார். 1920 ஆம் ஆண்டு மலேசியாவிலே பிறந்த சிவபாதசுந்தரனாரின் பரம்பரைப் பிரதேசம் சுழிபுரத்திலுள்ள தொல்புரமாகும். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே பயின்று புலவர்ப் பட்டம் பெற்றுள்ளார். பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரின் மாணாக்கர்; தமிழ் இலக்கிய இலக்கணங்களை நோக்கும்போதெல்லாம் அவற்றினூடாகச் சைவசித்தாந்தக் கருத்துக்களையும் தரிசிப்பவர் புலவர் சிவபாதசுந்தரனார். அவர் எழுதிய "புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி" நூல் 1972 ல் வெளியாகியது. இந்நூல் பலருடைய பாராட்டுக்களையும் பெற்றது. இவருக்கிருந்த இலக்கிய சைவசித்தாந்த ஆட்சியினை இந்நூலாய்வு வெளிப்படுத்துவதாக அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். இவர், உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளிலே பங்குபற்றிக் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார். காந்திய தத்துவத்திலே நல்ல நம்பிக்கை கொண்டுள்ள இவர் "காந்தீயம்" என்னும் நூலினை எழுதியது மாத்திரமல்லாமல் தன்னுடைய வாழ்க்கையையும் அவ்வாறு அமைத்துள்ளார்; சைவசித்தாந்தத்திலே ஈடுபாடுள்ள புலவர் சிவபாதசுந்தரனார், மாணவர்களுக்குச் சைவசித்தாந்த வகுப்புக்கள் நடாத்தி வந்துள்ளார். தமிழ்மொழி இலக்கண இலக்கிய வளர்ச்சிக்கும், சைவசித்தாந்த நெறி வளர்ச்சிக்கும் இவர் ஆற்றி வந்துள்ள பணிகளைப் பாராட்டி நாவலர் சபை "தமிழ் மாமணி;' என்னும் பட்டத்தினை இவருக்கு வழங்கிக் கௌரவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. க. சிவராமலிங்கம்

ஈழத் தமிழரிடையே சிறந்த இலக்கிய, சமயப் பேச்சாளர்களாகத் திகழ்பவர்களுள் திரு. கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம் அவர்களும் ஒருவர். புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலேயே ஆசிரியராகவும் உப அதிபராகவும் கடமையாற்றிச் சென்ற ஆண்டு ஓய்வு பெற்றார். அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னை கிறிஸ்தவக் கல்லூரி ஆகியவற்றில் உயர் கல்வி கற்றுப் பட்டம் பெற்ற இவர் தமிழ் நாட்டில் இருந்த காலத்தில் காந்தி இலட்சியத்தைப் பின்பற்றிக் கதராடை அணியும் பழக்கத்தை மேற்கொண்டு தொடர்ந்து செயற்படுத்திவருகிறார். நாடெங்கிலும் நடைபெறும் குருபூசை விழாக்கள், பண்பாட்டு விழாக்கள், சமய விழாக்கள், ஆகிய வற்றிலே பங்குபற்றி கேட்டாரைப் பிணிக்கும் வகையிலே கருத்துக்களை வழங்கிவருகிறார். இலங்கைக் கம்பன் சழகம் இவராலே பெருநன்மை பெற்றுவருகின்றது. திரு. சிவராமலிங்கம் இல்லாத கம்பன் விழா எதுவுமே நடந்ததில்லை. பட்டிமன்றம் பாங்கறிந்து ஏறுபவர் இவர். வழக்காடு மன்றங்கள் இவராலே பொலிவு பெறுவன. இவருடைய பேச்சு வன்மை கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துக் கூறும் திறமை ஆகியவற்றினாலே கவரப்பட்டு தாமும் அப்பண்புகள் பெற்றவராய்த் திகழும் ஒரு மாணவர் கூட்டம் இவருக்கு உண்டு. திருமாலுடன் செல்லும் ஆதிச்சடன்போல இவர் செல்லுமிடமெல்லாம் உடன் செல்லும் அன்பான மாணவர்கள் பலர் இவருக்கு உண்டு. பத்திரிகைகள், சஞ்சிகைகள் மூலமாகப் பல இலக்கிய சமயக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இவ்வாறு பேச்சாலும் எழுத்தாலும் தமிழ்ப்பணி செய்து வரும் இப்பெரியாரின் சேவையினைப் பாராட்டி நாவலர் சபை "தமிழ் மாமணி" என்னும் பட்டத்தினை இவருக்கு வழங்கிக் கௌரவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க. சொக்கலிங்கம் (சொக்கன்)

சொக்கனை அறியாத ஈழத்துத் தமிழறிஞர் எவருமிலர். இவர் ஒரு தமிழறிஞர்; ஆக்க இலக்கியப் படைப்பாளி; ஆசிரியப் பெருந்தகை; சமயப் பிரசாரகர் 1930ல் பிறந்த சொக்கன், தனது பதினைந்காம் வயது தொடக்கம் எழுதி வருகிறார். இவரது பொன்விழா ஆண்டில் 'மல்லிகை' அட்டைப்படம் அமைத்து இவரைக் கௌரவித்தது. தமிழ் ஆசிரியராகத் தமது வாழ்வை ஆரம்பித்த சொக்கன் ஆசிரியப் பயிற்சி பெற்று, இலங்கைப் பல்கலைக் கழகத்தில் வித்துவான் பட்டமும் பெற்றார். பின்னர் ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி பற்றி ஆய்வு செய்து இலங்கைப் பல்கலைக் கழக முதுகலைமாணிப் பட்டத்தினையும் பெற்றார். மரபுவழிக் கல்வி என்னும் பலமான அடித்தளத்திலே நின்று கொண்டுதான் சொக்கன் புதுமையை வாயார வரவேற்றார். நாவல், சிறுகதை என்னும் நவீன ஆக்க இலக்கியங்கள் பலவற்றை இவர் எழுதியுள்ளார். நாடக நூல்கள் பல ஆக்கியுள்ளார். கட்டுரை இலக்கியத்துக்குப் பங்களிக்கும் வகையிலே பெருந்தொகையான கட்டுரைகள் எழுதியுள்ளார். பதினொன்றுக்கு மேற்பட்ட சமய நூல்கள் இவராலே ஆக்கப்பட்டுள்ளன. விடா முயற்சியும் சலிப்படையாத வேலையும் இவருடைய திறனுக்குப் பக்கபலமாயிருக்கின்றன. இவருடைய இன்னும் இரண்டு நூல்கள் மிக அண்மையில் வெளிவரவுள்ளன. ஆசிரியராக, விரிவுரையாளராக, அதிபராகக் கல்விப்பணி புரிந்து வந்துள்ள இவர் நூல்கள் மூலம் தமிழ்ப்பணி ஆற்றுகிறார். தமிழையும் சமயத்தையும் சாதாரண மக்களுக்கும் வழங்குவதற்குக் கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள், கவியரங்குகள், சொற்பொழிவு மேடைகள் ஆகியவற்றிலே சொக்கன் பங்குபற்றிக் கொண்டேயிருப்பார். திருமுறை மன்றம் போன்றனவற்றின் தலைமைப் பதவி தமிழியல் வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பெரும்பணி யாழ்ப்பாணம் முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தை உண்டாக்கியதாகும். சொக்கனின் தமிழ்ப்பணியினையும், தமிழ்த்துறைகளிலே உள்ள ஆழ்ந்த துறைபோல அறிவினையும், ஆக்க இலக்கியத் திறனையும் மதித்துப் பாராட்டி நாவலர் சபை இவருக்கு ''தமிழ் மாமணி'' என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. அ. செ. முருகானந்தன்

ஈழத்து எழுத்துலகத்துறையில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக எழுத்தாக்கங்கள் படைத்து வந்துள்ளவர் திரு. அ. செ. முருகானந்தன் 1921ம் ஆண்டில் மாவிட்டபுரக் கிராமத்திலே பிறந்த இவர் தமது இருபதாவது வயது முதல் எழுத்தாளராகவும், பத்திரிகையாளராகவும் விளங்கித் தமக்கென எழுத்துலகில் முக்கிய இடத்தைப் பெற்றுக் கொண்டார். இன்று எம்மிடையே வாழும் ஈழத்து முதுபெரும் சிறுகதை எழுத்தாளராகிய இவருடைய எழுத்துப் பணியைக் கௌரவித்து தெல்லிப்பழை அம்பனைக் கலைப் பெருமன்றத்தினர் ''சிந்தனைச் செல்வர்'' என்னும் கௌரவ விருதினை வழங்கி ஓர் இலக்கியச் சிறப்பிதழையும் வெளியிட்டனர். அளவெட்டியிலே 1945ல் தம்மொத்த இளைஞர்களோடு சேர்ந்து ''மறுமலர்ச்சி'' என்ற கையெழுத்துப் பிரதியைத் தொடங்கினர். ஈழகேசரி, வீரகேசரி, சுதந்திரன், ஈழநாடு ஆகிய பத்திரிகைகளிலே தொழில் புரியும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. இவருடைய படைப்புகளில் நூல் வடிவம் பெற்றது. 'புகையில் தெரிந்த முகம்' என்னும் குறுநாவலாகும். 'யாத்திரிகன்' என்னும் நாவல் ஈழநாடு. பத்திரிகையிலே வெளியாயிற்று 'வசந்த மல்லிகை' என்றொரு நாவலையும் இவர் எழுதியுள்ளார். பெருந்தொகையான கதைகளை எழுதியுள்ளார். தென்னிந்தியாவிலே தொகுக்கப்பட்ட 'கதைக்கோவை' என்னுந் தொகுதியிலே இவருடைய 'மனித மாடு' என்னும் சிறுகதையும் இடம் பெற்றது. இவரது ஆக்க இலக்கியப் பணியைக் கௌரவிக்க யாழ்ப்பாணம் கலாசாரப் பேரவை இவருடைய இருபதுக்கு மேற்பட்ட சிறுகதைகளைத் தொகுத்து 'மனித மாடு' என்ற பெயரில் வெளியிடுகின்றது. ஈழத்து முதுபெரும் கதைஞர் என்ற வகையிலும், ஈழத்துப் புனைகதை வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பணியினைப் பாராட்டவும் நாவலர் சபை இவருக்கு ''இலக்கிய மாமணி'' என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. இ. முருகையன்

ஈழத்தில் இன்று தலைசிறந்த கவிஞராக விளங்குபவர் திரு. இ. முருகையன். 1935 ல் பிறந்த இவர் சாவகச்சேரி கல்வயல் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாகக் கவிதை எழுதி வருகிறார். கலை, விஞ்ஞான மாணிப் பட்டங்களைப் பெற்ற திரு. முருகையன் விரிவுரையாளராக, பாட நூல் எழுத்தாளராக, கல்விப் பணிப்பாளராக கடமைகள் புரிந்து, தற்போது யாழ்ப்பாணம் பல்கலைக்கழகச் சிரேஷ்ட உதவிப்பதிவாளராகப் பணி புரிகின்றார். நாடெங்கிலும் நடைபெற்று வரும் கவியரங்குகள் பல ஏறியவர்: தலைமைக் கவிஞராகப் பல கவியரங்குகள் நடத்தியவர். மக்கள் பண்புகளும், மக்கள் பணியும் இவர் கவிதைகளின் அடிப்படைகளாயமைந்துள்ளன. இதுவரை ஒரு வரம், வந்து சேர்ந்தன தரிசனம், நெடும்பகல், கோபுர வாசல், ஒருசில விதி செய்வோம், ஆதிபகவன், வெறியாட்டு, அது அவர்கள் என்னும் இவருடைய பா நூல்கள் வெளியாகியுள்ளன. இவற்றுள் பாநாடகங்கள் சில; நெடும்பாக்கள் சில. ஆக்க இலக்கியகாரராகத் திகழும் கவிஞர் முருகையன் கவிதையின் இலக்கணம் பற்றியும், கவிதைத் திறனாய்வு பற்றியும் பெருந்தொகையான கட்டுரைகள் எழுதியுள்ளார். தமிழ்நாட்டுச் சஞ்சிகைகள், ஈழத்துச் சஞ்சிகைகள் பத்திரிகைகள் ஆகியவற்றிலே இவருடைய கவியாக்கங்களும், திறனாய்வுக் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. கவிதை நயம் (இணை ஆசிரியர்) என்னும் நூல் இவருடைய திறனாய்வுத் திறனை வெளிப்படுத்துவது. ஈழத்துக் கவிதை வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பங்களிப்பினையும், இவரது கவிதா சிருஷ்டி ஆற்றலையும் போற்றி நாவலர் சபை இவருக்குக் "இலக்கிய மாமணி" என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. இ. சிவகுருநாதன்

ஈழத்திலே தற்போதுள்ள தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்கள் யாவருக்கும் மூத்தவர் திரு. இ. சிவகுருநாதன். யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் 1931 ஆம் ஆண்டிலே பிறந்த இவர் 1956ல் பேராதனை, இலங்கைப் பல்கலைக் கழகத்தின் பட்டதாரியானார். பேராசிரியர் வித்தியானந்தனின் அன்புக்குரிய மாணாக்கர்களில் இவரும் ஒருவர். யாழ். இந்துக் கல்லூரி, கொழும்பு ஸாஹிராக் கல்லூரி, பல்கலைக் கழகம் ஆகியவற்றிலே பத்திரிகைகளின் ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் 1955ல் தினகரன் பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் ஒருவராகச் சேர்ந்தார். 19[illegible]ல் அதன் பிரதம ஆசிரியராகப் பொறுப்பேற்றார். பத்திரிகைத் துறையிலே உழைத்தது மாத்திரமன்றி அதிலே ஆய்வுகளையும் மேற்கொண்டார். பத்திரிகைத் துறை தொடர்பான இவருடைய ஆய்வினை ஏற்றுக் கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இவருக்கு முதுகலைமாணிப் பட்டம் வழங்கியது. பத்திரிகைத் துறையிலே இவருக்கு இருக்கும் நீண்டகால அனுபவம் ஆகியவற்றைப் போற்றும் வண்ணம், உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் இவரை 1982ல் தலைவராகத் தேர்ந்து கொண்டது. ஈழத்து எழுத்தாளர்கள் பலரை தினகரன் வாயிலாக அறிமுகப்படுத்தியும் ஊக்கப்படுத்தியும் வந்துள்ளார். சட்டத்தரணியாகிய இவர் இலங்கைச் சட்டக் கல்லூரியின் விரிவுரையாளராகவும் பணியாற்றுகிறார். பத்திரிகைத்துறையின் வளர்ச்சிக்கு உழைப்பாலும், ஆய்வாலும் இவர் செய்துவரும் பணிகளைப் பாராட்டி நாவலர் சபை இவருக்கு " இலக்கிய மாமணி " என்னும் பட்டத்தினை வழங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. டொமினிக் ஜீவா

'மல்லிகை', ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் நன்கு அறிமுகமான சஞ்சிகை. கடந்த இருபத்திரண்டு வருடமாக இச்சஞ்சிகையினைத் தரமுடனே நடத்தி வருகிறார் திரு. டொமினிக் ஜீவா. 1927ல் பிறந்த ஜீவா யாழ்ப்பாணப் பட்டினத்திற்கு ஒரு தொழிலாளியாகவே அறிமுகமானார். உழைக்கும் வர்க்கத்தினை, ஆக்க இலக்கியப் படைப்பாளிகளை வாசகர்களை நேசிக்கும் ஜீவா 1964ல் 'மல்லிகை' சஞ்சிகையின் ஆசிரியரானார். இதற்கிடையில் இவர் இலங்கை சாகித்திய மண்டலம் கௌரவித்த ஒரு புனைகதை ஆசிரியராகி விட்டார். தன்னைப் போன்ற பிற எழுத்தாளர்களுக்கும் களம் அமைத்துக் கொடுக்க இலக்கிய மணம் வீசும் 'மல்லிகை' ஜீவாவினாலே நாட்டப்பட்டது. இவருடைய அசுரத்தரமான உழைப்பு, ஊக்கம் காரணமாக 'மல்லிகை'க் கொடி படர்ந்து தற்போது 'மல்லிகை'ப் பந்தலாகி விட்டது. எழுத்தாளர்களைக் கௌரவிக்கும் முகமாக 'மல்லிகை' அட்டையிலே அவர்களுடைய படங்கள் ஒழுங்காகப் பிரசுரிக்கப்பட்டன. ஈழத்து நவீன இலக்கியம் பற்றி ஆய்வு செய்யும் எந்த ஆராய்ச்சி மாணவனுக்கும் இன்றியமையாத தரவுகளைக் கொடுக்கும் ஏடாக 'மல்லிகை' விளங்கி வருகின்றது. இதன் தோற்றம், வளர்ச்சி, இதன் ஆசிரியர், இதில் வந்துள்ள விடயங்கள் ஆகியன பற்றி நுண்ணாய்வு செய்து ஒரு தனி ஆய்வேடு எழுதவும் வாய்ப்புண்டு. 'மல்லிகை' இப்பொழுது வெறுஞ் சஞ்சிகை அல்ல. அதுவும் ஜீவாவும் ஒரு நிறுவனம் ஆக்கிவிட்டார்கள். 'மல்லிகைப் பந்தல்' ஆதரவிலே நூல்கள் வெளியிடப்படுகின்றன; இலக்கியச் சந்திப்புக்கள் நடைபெறுகின்றன; கருத்து மோதல்கள் இடம் பெறுகின்றன; இலக்கியம் பேசாத சந்திப்புக்களும் நடைபெறுகின்றன. இவ்வாறு 'மல்லிகை' இதழ்களைத் தமிழ் கூறும் நல்லுலகெல்லாம் மணம் பரப்ப வைத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பணிபுரியும் திரு. டொமினிக் ஜீவாவைப் பாராட்டி நாவலர் சபை 'இலக்கிய மாமணி' என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. விசுவலிங்கம் கனகலிங்கம்

ஈழத்துத் திறமை வாய்ந்த ஓவியர்களுள் ஒருவராகத் திகழ்பவர் திரு. வி. கனகலிங்கம். 1920 ல் ஆனைக்கோட்டை உயரப்புலத்திலே இவர் பிறந்தார். திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய மாணவனாக இருக்கும் போதே ஓவியக்கலையிலே இவருக்கு ஈடுபாடு உண்டாயிற்று. 1942 தொடக்கம் வீரகேசரியிலே தொழில் புரியத் தொடங்கிய காலத்திலே ஓவியப் பிரசுரங்கள் செய்யும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. ஆனால், வீரகேசரியை விட்டு விலகித் தனியாக உழைக்கத் தொடங்கிய பொழுதுதான் திறமையான ஓவியங்களைத் தான் தீட்டியதாக இவர் கூறுவார். நூல்களுக்கு வர்ண அட்டைப் படங்கள் அமைத்துக் கொடுப்பதே இவருடைய முக்கிய பணியாகவுள்ளது. திருக்கேதீஸ்வரம் நாவலர் மடத்திலேயுள்ள நாவலர் பெருமானுடைய வர்ண உருவம் இவராலேயே தீட்டப்பட்டது நேபாள மன்னர், சுத்தானந்த பாரதி போன்றோருக்கு வழங்கப்பட்ட பாராட்டு மடல்களின் வர்ண அமைப்பு இவராலேயே செய்யப்பட்டதாகும். கொழும்பு விவேகானந்த சமாஜம் "ஓவிய மன்னர்" என்னும் பட்டத்தினையும், கொழும்பு தியாகராஜகான சமாஜம் "வர்ண வாரிதி" என்னும் பட்டத்தினையும் இவருக்கு வழங்கின. ஓவியத்துறை வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பணியினையும் அத்துறையில் இவருக்குள்ள திறமையினையும் மதித்துப் பாராட்டி நாவலர் சபை இவருக்கு "ஓவியமாமணி" என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. செல்லையா கந்தசாமி ஆசாரி

ஈழத்துச் சித்திரச் சிற்பக்கலை வரலாற்றின் மூத்த தலைமுறையினராக விளங்குபவர் திருநெல்வேலி செ. கந்தசாமி அவர்கள்: திருநெல்வேலிச் ஸ்ரீவாணன் சிற்பாலயத்தின் பிரதம சிற்பியாகத் திகழ்ந்த இவருடைய கைவண்ணத்திலேயே இன்று யாழ்ப்பாணத்தில் பிரபலமாயிருக்கும் கோயில்களின் சித்திரத் தேர்கள் பல உருவாயின. பரம்பரையான குலத்தொழிலாக இருந்து வந்த சிற்பக் கலையை இவரது சிறிய தந்தையாரும் சிற்பியுமான சிற்றம்பல ஆசாரியாரிடம் குரு சிஷ்ய முறையிலே பயின்று தனது பத்தொன்பதாவது வயதிலே இரத்தினபுரி சிவன் கோவிலின் கைலாச வாகனத்தை அழகுறச் செய்து முடித்தார். உசன் கந்தசுவாமி கோயில், இணுவிற் பிள்ளையார் கோயில், அச்சுவேலிப் பிள்ளையார் கோயில், புங்குடுதீவு புளியடித்துறை பிள்ளையார் கோயில், அச்சுவேலி நாவற்காடு கந்தசுவாமி கோயில், நாரந்தனை அம்மன் கோயில் ஆகியவற்றின் பூரண சித்திரத் தேர்களை இவர் உருவாக்கிக் கொடுத்துள்ளார். அரை நூற்றாண்டு காலமாக ஓட முடியாத நிலையிலிருந்த, இந்திய சிற்பக் கலைஞர்களது கைவண்ணத்தில் உருவான, இணுவில் கந்தசுவாமி கோயிலின். அழகு மஞ்சத்தைத் தனது தொழில்நுட்பக் கலாவண்ணத்தால் ஓடச்செய்து புகழீட்டியவர். சமூக சேவையிலும் ஈடுபாடு கொண்டிருந்த இக்கலைஞரின் பணிகள் நாம் மறக்கமுடியாதன. இவருடைய கலைத்திறன்களையும், கலை வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளையும் பாராட்டி நாவலர் சபை இவருக்கு "சித்திரச் சிற்ப மாமணி" என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. ந. சண்முகரத்தினம்

ஈழத்து இசைக்கலைஞர்களிலே மூத்தவராகத் திகழ்பவர் திரு. சண்முகரத்தினம். 1915 ஆம் ஆண்டு உடுவிலிலே பிறந்த இவர் இசையிலேயுள்ள ஈடுபாடு காரணமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே இசைபயின்று சங்கீதபூஷணமானார். ஏறக்குறைய அறுபது வருட இசையனுபவம் பெற்றவர் இவர். திருப்பாம்பரம் சுவாமிநாதனிடம் இசைப்பயிற்சி பெற்ற திரு. சண்முகரத்தினம் பரமேஸ்வராக் கல்லூரியிலே சில காலம் இசையாசிரியராகப் பணி புரிந்தவர். பின்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இசைப்பகுதியிலே பல காலமாகப் பணியாற்றினார். ஈழத்திலிருந்து அகில இந்திய வானொலியிலே அரங்கிசை செய்த முதல் இசையறிஞர் இவரேயாவர். மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலே அரங்கிசை செய்து புகழீட்டிய திரு சண்முகரத்தினத்தின் இசைப்பணியினையும் திறமையினையும் பாராட்டி நல்லை ஆதீனம் 1980 ஆம் ஆண்டு இவருக்கு "இசைச் சக்கரவர்த்தி" என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தது. இன்றுள்ள ஈழத்து இசைக் கலைஞர்களெல்லாம் தலைவணங்கும் பெருமையுடையவர் இவர். சங்கீத கதாப்பிரசங்கமும் இவர் செய்கதுண்டு. ஈழத்தின் பல அரங்குகளிலே இவருடைய குரல் ஒலித்தது. இவருடைய குடும்பம் கலைக்குடும்பம். மனைவி இசையாசிரியையாகப் பணியாற்றுகிறார். ஆண்பிள்ளைகள் இருவர் தந்தையின் இசைப் பாரம்பரியத்தை வளர்த்துச் செல்கிறார்கள். பல ஆண்டுகளாக ஈழத்து இசையுலகிலே வித்துவானாகத் திகழ்ந்து இசைத் தொண்டு புரிந்தவர் திரு. சண்முகரத்தினம். இவர் பணியினையும் இசைத்திறமையினையும் பாராட்டிக் கௌரவித்து நாவலர் சபை "இசை மாமணி" என்னும் பட்டத்தினை இவருக்கு வழங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ நடராஜஐயர் வீரமணிஐயர்

இணுவில் இசைக் குடும்பத்திலே 1931ல் பிறந்த திரு. ந. வீரமணி ஐயர் பாடசாலையிலே படிக்கின்ற காலத்திலேயே கவிதைகள் இயற்றத் தொடங்கினார்; இசையிலே ஈடுபாடுங் கொண்டார். கலாக்ஷேத்திரத்தில் இசைநடனப் பயிற்சிபெற்ற திரு. வீரமணிஐயர் சாகித்தியங்கள் இயற்றுவதிலே வல்லுனரானார். இவருடைய சாகித்தியங்களின் சிறப்புத் தன்மையினை அவற்றைப் பாடிய இசைக்கலைஞர்கள் மூலம் உணர்ந்துகொள்ளலாம். இவருடைய குரு எம். டி. ராமநாதன், மகாராஜபுரம் சந்தானம், சீர்காழி கோவிந்தராஜன், டி. எம். சௌந்தரராஜன் ஆகியோர் இவரின் சாகித்தியங்களைப் பாடியுள்ளனர். கொத்தமங்கலம் சுப்புத் தலைமையிலே இவர் இயற்றிய "திருமயிலைக் குறவஞ்சி" என்னும் நூல் வெளியிடப்பட்டது. இன்னும், இவர் எழுதிய "72 மேளகர்த்தா ராகக் கீர்த்தனை" என்னும் நூலும் விரைவிலே வெளியிடப்படவுள்ளது. கலாக்ஷேத்திரம் முதல்வர் திருமதி ருக்மணி அருண்டேல் "ஆசுகவி" என்னும் பட்டத்தினையும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் "சாகித்திய சிரோன்மணி" என்னும் பட்டத்தினையும் இவருக்கு வழங்கினர். கொழும்பு தியாகராஜகான சமாசம் "இயலிசை வாரிதி" என்னும் பட்டத்தினை இவருக்கு வழங்கியது. சாகித்திய உலகிலே தனக்கென ஓர் இடந்தேடிக் கொண்டவர் திரு. வீரமணிஐயர். இவர் ஆற்றிய சாகித்தியப் பணியைப் பாராட்டி "சாகித்திய மாமணி" என்னும் பட்டத்தினை நாவலர் சபை வழங்கி இவரைக் கௌரவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. கந்தசாமி இராசா

நாதசுரம் பற்றி அறிந்த ஈழத் தமிழர்களுக்கு மாவிட்டபுரம் இராசா என்றால் நன்கு தெரியும். 1908 ம் ஆண்டு மாவிட்டபுரத்திலே பிறந்த திரு. இராசா ஒன்பது வயதிலே தனது இசைக்கல்வியைத் தொடங்கினார். தனது பன்னிரண்டாவது வயது தொடக்கம் நாதசுர வித்தையைக் கற்கத் தொடங்கினார். 1931 ஆம் ஆண்டு மாவிட்டபுரம் கந்தன் முன்னிலையிலே இவருடைய முதல் கச்சேரி நடைபெற்றது. அன்று தொடக்கம் நாதசுர உலகிலே இவர் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டார். இராசா அவர்களின் நாதசுரத்திலிருந்து தோடி இராகம் தேனாறு போலப் பாய்ந்து வருவதைக் கண்டும் கேட்டும் ரசித்தவர்கள் "தோடிக்கு இவர் இராசா" என்றனர். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் ஆதீன நாதசுர வித்துவானாக, விளங்கிய திரு. இராசா இதுவரை ஈழத்தில் நாதசுரக் கலைஞர்கள் ஐம்பது பேருக்கு மேல் உருவாக்கியுள்ளார். இன்று பிரபலம் வாய்ந்த நாதஸ்வர வித்துவான்களாகிய ச. சண்முகநாதன், இ. சுந்தரமூர்த்தி. கோ. கானமூர்த்தி' கோ. பஞ்சமூர்த்தி, செ. சிதம்பரநாதன், இ. கேதீஸ்வரன் போன்றோர் இவரிடம் சிட்சை பெற்றவர்கள். ஈழத்தின் பல பாகங்களிலும், இந்தியாவிலும் அரங்கிசைகளிலே நாதசுரம் வாசித்துப் புகழ் பெற்ற இவரைப் பல ஆதீனங்கள் கௌரவித்துள்ளன. நல்லை ஆதீனம் "நாதஸ்வர தாரஸ" என்னும் பட்டத்தை வழங்கி இவரைக் கௌரவித்தது. நாதசுர இசை வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பணியினையும், இசைத்திறனையும் பாராட்டி நாவலர் சபை இவருக்கு "நாதசுர மாமணி" என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. ஏ. ரி. பொன்னுத்துரை

ஈழத்து நாடக இலக்கியத்துக்கும் நடிப்புத் துறைக்கும் சிறந்த பங்களிப்புச் செய்தவர் கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை. கடந்த முப்பத்தாறு வருடகாலமாக ஈழத்து நாடக உலகிலே தன் பங்களிப்பினை இவர் செலுத்தி வருகிறார். பரமேஸ்வரக் கல்லூரி நாடகத்திலே தோன்றி அதிபர் திரு. எஸ். சிவபாதசுந்தரம் M. A. அவர்களுடைய பாராட்டுடன் இவருடைய நாடக உணர்வு உத்வேகங் கொண்டது. அன்று முதல் இன்று வரை மேடை ஏறி நாடகங்கள் நடித்து வருகிறார். நாடக அரங்க விடயங்களிலே புதிய உத்திகள் இருப்பின் அவற்றைத் தனக்கு இளையவர்களாயினும் வல்லவர்களாயின் கற்று உணர முன்னிற்பவர். இதனால் தான் ஐம்பது வயது தாண்டிய பின்னரும் நாடக அரங்கக் கல்லூரியிலே பயிற்சி பெற்று நாடகங்கள் நடிக்க முன் வந்திருக்கிறார். நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்களை நடிகர்களாகப் பயிற்றியுள்ளார். ஈழத்து நாடக இலக்கியம் வளர்வதற்கு இறுதிப் பரிசு, நாடகம், கூப்பிய கரங்கள், பக்தி வெள்ளம், பாடசாலை நாடகம் போன்ற நாடகநூல்களை வெளியிட்டுப் பணியாற்றியுள்ளார். இவருடைய நடிப்புத்திறனை மெச்சி ஈழத்து நாடக உலகின் 'கலையரசு' எனப்படும் பெரியார் சொர்ணலிங்கம் இவருக்கு 'கலைப்பேரரசு' என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தார் ஈழத்து நாடக இலக்கிய வளர்ச்சிக்கும், நாடக அரங்க வளர்ச்சிக்கும் இவர் ஆற்றிய பணிகளைப் போற்றி நாவலர் சபை இவருக்கு "நாடகமாமணி" என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு வி. வி. வைரமுத்து

நடிகமணி வி. வி. வைரமுத்துவை அறியாதவர் ஈழத்தில் வெகு சிலரே. 1924ம் ஆண்டு காங்கேசன்துறையிலே பிறந்த திரு வைரமுத்து தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவனாகத் தமது பதின்மூன்றாவது வயதிலே அப்பூதி அடிகள் நாயனாராக மேடையேறினார். பக்த நந்தனார், அரிச்சந்திர மயான காண்டம், சாரங்கதாரா, வள்ளி திருமணம், அல்லி அர்ச்சுனா, சாவித்திரி சத்தியவான், கோவலன் ஆகிய நாடகங்களிலே பிரதான பாத்திரங்கள் ஏற்று நடித்து வந்துள்ளார். இவருடைய மயான காண்டம் ஆயிரத்துக்கு மேற்பட்ட தடவைகள் மேடையேறின. திரு வைரமுத்துவின் நாட்டுக் கூத்துப் பணியையும் திறமையையும் பாராட்டி 1953ல் நெல்லியடி நாவலர் மடம் அரங்கில் கலையரசு சொர்ணலிங்கத்தால் "நடிகமணி" என்னும் பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது. இலங்கைக் கலைக்கழகத்தால் பல தடவை கௌரவித்துப் பாராட்டப்பட்டவர். ஈழத்து மரபுவழி நாடக உலகிலே தனக்கொரு இணையற்ற இடத்தினைத் தேடிக் கொண்டு தொடர்ந்தும் இத்துறையிலே பணியாற்றி வரும் திரு. வைரமுத்துவின் சேவைகளைப் பாராட்டி நாவலர் சபை "நடிக மாமணி" என்னும் பட்டத்தினை இவருக்கு வழங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. வேல். ஆ.ஆனந்தன்

கலைஞர் வேல். ஆனந்தன் உலகப்பிரசித்தி பெற்ற கதகளி நடனமேதை டாக்டர் குரு கோபிநாத் அவர்களுடைய சீடனாவார். கேரள விஸ்வ கலா கேந்திரத்தில் கதகளி நடனம் பயின்ற வேல் ஆனந்தன் ஸ்ரீ சுப்ரயா பிள்ளை அவர்களிடம் பரதநாட்டியமும் பயின்றார். குரு கோபிநாத்துடன் இந்தியாவின் பல இடங்களிலும் கதகளி நடனம் அரங்கேற்றங்களிலே பங்குபற்றி ஈழம் திரும்பினார். இங்கு ''கலைக்கோவில்'' என்னும் நிறுவனத்தை அமைத்துக் கலைப்பணி செய்து வருகிறார். 1971ல் புதுடில்லியிலும் 1972ல் கேரளத்திலும் நடைபெற்ற அகில உலக நாட்டிய விழாக்களிலே பங்குபற்றியுள்ளார். இந்தியாவிலுள்ள அகில உலக மக்கள் நாடக மன்றம் 1973ல் இவரை இந்தியப் பண்டைய நாட்டியத்துறையிலே உலகப் புகழ் பெற்ற கலைஞராக மதித்துப் பாராட்டியது. நவரசங்களை உடலுறுப்புகளாலே திறமையுடன் வெளிப்படுத்தும் இக்கலைஞர் சீதாஹரணம், பஸ்மாசுரன், சிவதாண்டவம் போன்ற நாட்டிய நாடகங்களை மக்களுக்கு அளித்துள்ளார். அண்மையில் மேடையேறிய இவருடைய ''என்ன தான் முடிவு'' நாட்டிய நாடகம் ஈழத்தவரைக் கவர்ந்த கலைப்படைப்பு பதினெட்டுக்கு மேற்பட்ட நாட்டியக்கலைஞர்களை உருவாக்கித் தந்துள்ள வேல் ஆனந்தன் உலகின் பல நாடுகளிலே தன் மாணவர்களுடன் சென்று கதகளி நடன நிகழ்ச்சிகளை அளித்து வருவதன் மூலம் ஈழத்தமிழர் புகழை உலகளாவச் செய்துள்ளார். நாட்டியமேதையாகவும், நாட்டிய ஆசிரியராகவும், நாட்டிய நாடகத் தயாரிப்பாளராகவும் தொடர்ந்தும் பணியாற்றி ஈழத்துக்குப் புகழ் தேடித்தரும் வேல் ஆனந்தன் பணிகளைக் கௌரவித்து நாவலர் சபை ''நாட்டிய மாமணி'' என்னும் பட்டத்தினை இவருக்கு வழங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. க. நா. கணபதிப்பிள்ளை

கலையுலகிலே "சின்னமணி" என்றால் எல்லோருக்கும் தெரிந்தவர் திரு. க. நா. கணபதிப்பிள்ளை. 1936 ஆம் ஆண்டு பருத்தித்துறை மாதனையிலே பிறந்த கணபதியார் நாகலிங்கம் கணபதிப்பிள்ளையை ஒன்பது வயதிலேயே கலைமலிந்த மாதனை; இவரைக் கலை ஈடுபாடுள்ளவராக ஆக்கிவிட்டது. பல அண்ணாவி மரபு, நவீன நாடகங்களிலே நடித்த அனுபவமும், சில நாடகங்களை நெறிப்படுத்திய அனுபவமும் இவருக்குண்டு. அண்ணாவி மரபு நாடகங்களிலே இவருக்கிருந்த தொடர்பு இவருடைய இசை, நாடகத் திறன்களை நன்கு வளர்த்தது. இத்தொடர்பு இவருக்குப் பிற்காலத்திலே புகழீட்டிக் கொடுத்த வில்லிசைத் துறைக்கு வித்திட்டது. இவர் 1968 முதல் கலைவாணர் வில்லிசைக்குழு என்ற நிறுவனத்தை அமைத்து அதன் மூலமாகத் தனித்துவமாக வில்லிசை நிகழ்ச்சிகள் அளித்து வந்துள்ளார். இதுவரை ஐம்பத்தியேழு புராண இதிகாசக் கதைகளும், பத்துக்கு மேலான சமூக - இலக்கிய - பண்பாட்டுக் கதைகளும், இராமாயணம், மகாபாரதம், அன்னை அருள், பிள்ளையார் பெருமை என்னும் தொடர் கதைகளும் வில்லிசை மூலமாக இவராலே நிகழ்த்தப்பட்டுள்ளன. மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குப் பலதடவை சென்று வில்லிசை நிகழ்ச்சிகள் நிகழ்த்தியுள்ளார். மேலைப்புலோலி கதிரைவேற்பிள்ளை கலாமன்றம் "வில்லிசை வேந்தன்" என்றும், புங்குடுதீவு கண்ணகை அம்மன் தேவஸ்தானம் "கலாவிநோதன்" என்றும், மலேசியாவில் "முத்தமிழ் வித்தகன்" "வில்லிசை மாமணி" "வில்லிசை வாணன்" "சைவக் கதாவாரி" என்றும் இவருக்குப் பட்டங்கள் பல வழங்கப்பட்டுள்ளன. ஈழத்திலே வில்லிசைத் துறைக்கு இவர் ஆற்றியுள்ள பங்களிப்பினையும், இத்துறையிலே இவருக்குள்ள திறமையினையும் பாராட்டி நாவலர் சபை இவருக்கு "வில்லிசைப் புலவன்" என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர், பேராசிரியர் க. கைலாசபதி

விமரிசனத்தை இலக்கியமாகவும், கோட்பாடாகவும், சித்தாந்தமாகவும் தமிழ் உலகத்து அறிமுகஞ்செய்து வழிநடத்திக் காட்டியவர் அமரர் பேராசிரியர் க. கைலாசபதி. 1933 ல் கோலாலம்பூரிலே பிறந்த இவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, கொழும்பு ரோயல் கல்லூரி மாணவனுவர். இலங்கைப் பல்கலைக்கழக பீ. ஏ., எம்.ஏ. பட்டங்களுடன் பர்மிங்காம் பல்கலைக்கழக கலாநிதிப் பட்டத்தையும் பெற்றூர். தினகரன் பத்திரிகை பிரதம ஆசிரியராகவும், யாழ்ப்பாண வளாக முதல் தலைவராகவும், தமிழ்த்துறையின் முதல் பேராசிரியராகவும் விளங்கினூர். இவர் எழுதிய கட்டுரைகள் பெருந்தொகை பின்வரும் நூல்களை எழுதியுள்ளார். இரு மகாகவி, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், தமிழ் நாவல் இலக்கியம், அடியும் முடியும், கவிதை நயம (இணை), இலக்கியமும் திறனூய்வும், பாரதி நூல்களும் பாடபேத ஆராய்ச்சியும், மக்கள் சீனம், காட்சியும் கருத்தும் (இணை), சமூகவியலும் இலக்கியமும், திறனூய்வுப் பிரச்சினைகள், நவீன இலக்கியத்தின் அடிப்படைகள், இலக்கியச் சிந்தனைகள் Tamil Heroic Poetry. பெரும்பாலான இவருடைய எழுத்துக்கள் இலக்கியத் திறனூய்வுத் துறையைச் சார்ந்தவை. ஈழத்திலேயுள்ள இலக்கியத் திறனூய்வாளர்களுக்கு இவர் ஒரு வழிகாட்டி. தான் உருவாக்கிய மாணவ பரம்பரை மூலமாக இத்திறனூய்வுத்துறை வளர்ச்சியடையும்படி செய்தார். இலக்கியத் திறனூய்வு மட்டுமன்றி மூலபாடத் திறனூய்வும் இவர் கைப்பட்ட துறையாயிற்று. இலக்கியத் திறனூய்வாளனுகச் செய்த பணியினையும், இலக்கியத் திறனூய்வுத்துறை வளர்ச்சிக்கு ஆற்றிய பணியினையும், ஏனைய இவருடைய கலை இலக்கியப் பணிகளையும் பாராட்டி இவருடைய சாந்தி நிலையில் நாவலர் சபை இவருக்குக் "கலை மாமணி" என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். திரு. கார்த்திகேசு விசுவலிங்கம்

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற நெறிகளுக்கமைய மக்கள் சேவை செய்து; ஈழம் வாழ் துயருற்ற மக்கள் மனத்திலே இடம் பிடித்துக் கொண்டவர் அமரர் கா. விசுவலிங்கம். 1916 ஆம் ஆண்டிற் பிறந்த இவர் பொலிஸ் திணைக்களத்திலே தனது முதல் உத்தியோகத்தைத் தொடங்கினார், உத்தியோகம் பார்க்கும் காலத்தே தொழிற்சங்க நடவடிக்கைகளில் அதிக கவனஞ் செலுத்தினார். அநீதி விளையும் இடங்களிலே ஆவேசத்துடன் போராடினார். மக்கள் சேவையின் மூலமே இறைவனுக்குச் சேவை செய்யலாம் என்ற நம்பிக்கையிலே உழைத்த ஒரு சமூகப் பணியாளன் இவர். தமிழ்ப் பிரதேச விருத்திக்காக உழைத்த நிறுவனங்களுடன் இணைந்து இவர் அரும்பணி ஆற்றியவர். நாவலர் சபையின் துணைச் செயலாளராகவும். துணைத் தலைவராகவும் இருந்து சபையின் பணிகள் செவ்வனே அமைய சேவை ஆற்றியவர். 1977 இனக் கலவரத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் நலன்களைக் கவனிக்க இவர் ஆற்றிய பணிகள் எல்லோராலும் ஏகோபித்த முறையிலே பாராட்டப்பட்டுள்ளன. 1983ல் ஓர் அகதியாக அகதி முகாமுக்குச் சென்ற அமரர் விசுவலிங்கம் பம்பலப்பிட்டியில் அமைக்கப்பட்ட பத்தாயிரத்துக்கும் அதிகமான தமிழர்களைக் கொண்ட மிகப்பெரிய அகதிகள் முகாமின் பொறுப்பாளராகக் கண் துஞ்சாது, மெய் வருத்தம் பாராது ஆற்றிய தொண்டினைப் பலரும் அறிவர். 1983ல் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் அமைக்கப்பட்ட பொழுது அதன் தலைவராக முன்னை நாட்களிலே ஆற்றியதை விடப் பன்மடங்கு வேகமாகப் பணியாற்றியதைத் தமிழ் மக்கள் அறிவர். திருக்கேதீஸ்வரம், மானிப்பாய் மருதடிப் பிள்ளையார், சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயங்களின் நிர்வாகங்களூடாக இவர் சமயப் பணிகளும் ஆற்றியுள்ளார். இவருடைய பல்வகைப்பட்ட பணிகளுள் சமூகப்பணி விதந்து கூறப்படத்தக்கதாகும், சமூகத் தொண்டனாகவே இவர் பணி புரிந்தார். இவருடைய பணிகளைப் பாராட்டும் வண்ணம் நாவலர் சபை இவருடைய சாந்தி நிலையில் இவருக்கு ''சமூக மாமணி'' என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு. கே. டானியல்

ஈழத்தின் "மானிடவியல் நாவலாசிரியர்" என்று கூறினால் அது அமரர் திரு. கே. டானியலுக்கே மிகப் பொருத்தமாக அமையும். 1926ல் பிறந்த இவர் ஒரு சாதாரண தொழிலாளியாகவே தன் வாழ்க்கையைத் தொடங்கினார். தனது பதினாறாவது வயதிலேயே பொது வாழ்வில் ஈடுபட்ட டானியல் இருபத்தோராவது வயதிலே ஒரு பொதுமை நோக்குடைய அரசியலையும் தெரிவு செய்தார். சமூக அடக்குமுறைக்கு எதிரான போராட்டங்களிலே ஈடுபட்ட ஓர் போராளி. சமூக அடக்குமுறை பல்வேறு முகங்களிலே ஈழத்துத் தமிழ்ச் சமுதாயத்தில் இருந்துவந்த காரணத்தினாலேதான் இவருடைய எழுத்துக்களுக்கெல்லாம் பொருளாகவும் அது அமைந்தது. இவர் எழுதி வெளிவந்துள்ள புனைகதைகள்: டானியல் கதைகள், உலகங்கள் வெல்லப்படுகின்றன, பஞ்சமர், போராளிகள் காத்திருக்கின்றனர், கோவிந்தன், பூமரங்கள், அடிமைகள் ஆகியன தொடர் நாவல்களாகப் பத்திரிகைகளிலே வெளிவந்தவை. நெடுந்தூரம், மையக்குறி, முருங்கையிலைக்கஞ்சி ஆகியன அண்மையில் வெளிவரவிருப்பன: கானல், பஞ்சகோணங்கள், தண்ணீர் என்னும் நாவல்களாகும். ஈழத்தில் மட்டுமன்றித் தமிழ் நாட்டிலும் பஞ்சமர், கோவிந்தன், அடிமைகள் நாவல்கள் மூலம் அறிமுகமாகியுள்ளார். தனது எழுத்தினால் மட்டுமன்றி வாழ்வினாலும் மக்கள் மனதிலே இடம் பிடித்துக்கொண்டவர். இவருடைய புனைகதைகளிலே சாணப்படுகின்ற பெருந்தொகையான பண்பாட்டுச் செய்திகள். ஆய்வாளர்களுக்குத் தரவுகளாக வல்லன. கே. டானியல் ஒரு மக்கள் எழுத்தாளர். மக்களுடன் இரண்டறக் கலந்து அவர்தம் வாழ்வையும், மொழியையும் இயல்பான முறையிலே தன் படைப்புக்களிலே இவர் வடித்து விட்டுள்ளார். இவருடைய அடிமைகள் என்னும் நாவலின் யப்பானிய மொழிபெயர்ப்பு வேலை தோக்கியோவிலே தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. புனைகதைத் துறையிலே இவருக்கிருந்த திறன்களையும், அத்துறை வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பணியினையும் பாராட்டி நாவலர் சபை இவருடைய சாந்நிதியிலே இவருக்கு "இலக்கிய மாமணி" என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் த. சண்முகசுந்தரம்

நாற்பது ஆண்டுகள் தமிழ் இலக்கிய உலகில் சஞ்சரித்து நாடகங்களையும், நாவல்களையும், கதைகளையும், கட்டுரைகளையும். ஆய்வுக்கட்டுரைகளையும். விமர்சனங்களையும் எழுதி, பத்திரிகையாளராக, ஆசிரியராக, அதிபராக, புனை கதை - நாடக ஆசிரியராக, நாட்டாரியல் அறிஞராக விளங்கி அமரத்துவம் எய்தியவர் திரு. த. சண்முகசுந்தரம். பருத்தித்துறையையும், மாவிட்டபுரத்தையும் பெற்றோர் வழியாகச் சொந்த ஊர்களாகக் கொண்ட இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்திலே பேராசிரியர்களான கணபதிப்பிள்ளை, செல்வநாயகம், வித்தியானந்தன் ஆகியோரிடம் கற்கும் வாய்ப்புப் பெற்றவர். இவர் தன்னுடைய ஆசிரியர்மேற் கொண்ட குருபக்தி பற்றி எல்லோருக்கும் நன்கு தெரியும். பேராசிரியா கணபதிப்பிள்ளை போல இவரும் பல துறைகளிலே தன் ஆக்கப்பணிகளை ஆக்கியுள்ளார். 'வாழ்வு பெற்ற வல்லி', 'பூதத்தம்பி' 'இறுதி மூச்சு' என்னும் நாடகங்களையும், மீனாட்சி' என்னும் நாவலையும், கலை - மக்கள் கலை தொடர்பாக 'கலையும் மரபும்'. 'இசையும் மரபும்', 'யாழ்ப்பாணத்து வீர சைவர்', 'மாவை முருகன் காவடிப்பாட்டு', 'மாருதப்புரவல்லி கப்பற் பாட்டு', 'குருநாதர் மான்மியம்', 'காகப்பிள்ளையார் மான்மியம்', 'வன்னிநாச்சிமார் மான்மியம்', 'கண்ணகி அம்மன் கஞ்சி வார்ப்புத் தண்டற் பாட்டு', குருவிச்சி நாய்ச்சி சலிப்பு' 'நாட்டார் இலக்கியத்தில் மழை இரங்கிப் பாடல்', 'புதுக் குடியிருப்புக் கூத்தும் மரபும்', 'யாழ்ப்பாணத்து மாட்டு வண்டிச் சவாரி' என்னும் நூல்களையும், 'கலையருவி கணபதிப்பிள்ளை', 'கலை மகிழ்நன', 'சிவத்தமிழ்ச் செல்வம்' என்னும் வாழ்க்கை வரலாற்று நூல்களையும். 'யாழ்ப்பாணத்து வீரசைவர்' போன்ற பிறநூல்களையும் இவர் இயற்றியுள்ளார். பல துறைகளிலே இவர் ஈடுபாடு கொண்டபோதிலும். மக்கள் கலை தொடர்பான இவருடைய பங்களிபபு விதந்து கூறப்படத்தக்கது. இத்துறை வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பணியினைப் பாராட்டி நாவலர் சபை "மக்கள் கலைமாமணி" என்னும் பட்டத்தினை இவருக்கு, இவருடைய சாந்தி நிலையிலே வழங்கிக் கௌரவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரன் செல்வன் பொன். விபுலானந்தன்

கல்லூரியிலே தன் கடமையினைச் செய்யும் வேளையிலே சூடுபட்டு இறந்து தமிழ் மக்கள் மனத்திலே இடம் பிடித்துக் கொண்டவன் செல்வன் பொன்னம்பலம் விபுலானந்தன். 1969ல் யாழ்ப்பாணத்திலே பிறந்த இப்பிள்ளை 1976ல் யாழ். மத்திய கல்லூரியில் மாணவனாகச் சேர்ந்தான். கல்லூரியில் படிப்பிலே கவனஞ் செலுத்தியது மாத்திரமன்றி ஏனைய கல்லூரி சார் நிகழ்ச்சிகளிலும், நடவடிக்கைகளிலும் அதிக அக்கறையுடன் பங்குபற்றினான். லியோக் கழக அங்கத்தவனாக, குருளைச் சாரணனாக, சென் ஜோன்ஸ் முதலுதவிப் படை அங்கத்தவனாக, மாணவ தலைவனாக, கூடைப்பந்தாட்ட அணித்தலைவனாக, இசைக்கலை மன்றப் பொருளாளராக என்றெல்லாம் பல்வேறு நிலைகளிலே கல்லூரிக் கடமைகளைச் செவ்வனே செய்து வந்துள்ளான். ஏறக்குறைய முப்பது மேடைக்கலை நிகழ்ச்சிகளிலே பங்கு பற்றியுள்ளான்; North Star இசைக்குழுவின் வாத்திய அங்கத்துவனாக மக்களுக்கு இசையின்பமும் வழங்கியுள்ளான் தலைமைத்துவம், கடமை, கட்டுப்பாடு என்ற நெறிகளுக்கியைந்த மாணவனாக அமைந்த விபுலானந்தன் ஏனைய மாணவர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமையக் கூடியவன். விபுலானந்தனுடைய வாழ்வு வரலாறு மற்றைய மாணவர்களாலே அறியப்பட வேண்டியதொன்று. மாணவக் கடமையிலே ஈடுபட்டிருந்த போது ஏனைய தன் கல்லூரி மாணவர்களை ஆபத்தினின்று காப்பாற்ற முனைந்த போது இராணுவத்தினரின் குண்டுபட்டு உயிர் நீத்தான். இம்மாணவனின் கடமையுணர்வினையும், தன்னலமற்ற மனப்பாங்கினையும் பாராட்டி சாந்தி நிலையிலே இம்மாணவனுக்கு ''மாணவமாமணி'' என்னும் பட்டத்தினை நாவலர் சபை வழங்கிக் கௌரவிக்கின்றது.

---

ஸ்ரீகாந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org